# இரட்சணிய யாத்திரிகம் வழி இயேசுவின் சிலுவைப்பாடும் கருணைவீரமும்

***பெ. பவுன் துரைச்சி***
உதவிப்பேராசிரியர்
ஸ்ரீ சங்கர பகவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கொம்மடிக்கோட்டை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6393

***முன்னுரை***

*இன்று உலகெங்கும் பெருமளவு பரவியுள்ள மதம் கிறித்துவ மதம் ஆகும். இரட்சணிய யாத்திரிகம் ஓரு பெருங்காப்பியமாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் பற்றி பேசுவது காப்பியம். பரிசேயர்கள் எனப்படும் மதகுருமார்கள் மக்களை மூட நம்பிக்கையில் ஆழ்த்திக் கொண்டிருந்தனர். அவர்களை அந்த மூட நம்பிக்கைகளிலிருந்து மீட்பதற்காகவும், மக்கள் செய்த பாவங்களிலிருந்து விடுவிக்கவுமே இயேசு கிறித்து இம்மண்ணுலகில் அவதரித்தார். அதற்காக பல இன்னல்களையும், தன் இன்னுயிரையும் துறந்தார் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.*

## நூல் அமைப்பு

"இரட்சணிய யாத்திரிகம்" என்பதன் பொருள் "உயிர் தன்னைக் காக்க வேண்டி, இறைவனை நோக்கி செல்லும் பயணம்" என்பதாகும். ஜான்பன்யன் எழுதிய The Pilgrim's Progress என்னும் நூலைத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெயரில் மொழிபெயர்ப்புச் சமய இலக்கியத்தை உருவாக்கினார். 5 பருவங்கள் 4000 பாடல்கள். நூல் எங்கும் இராமாயணத் தாக்கம் காணப்படுவதால் இவரைக் கிறித்துவக் கம்பர் என்பர். இது பெரும் உருவகக் காப்பியமாக அமைகிறது. காப்பியத்தின் பேருறுப்புகள் ஆதிபருவம், குமாரப்பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணி பருவம் அமைகிறது. காப்பியத்தின் சிற்றிருப்பு படலமாக அமைகிறது.

## ஆசிரியர் வரலாறு

வைணவராகப் பிறந்து வளர்ந்து தம் முப்பதாம் வயதில் கிறிஸ்தவராக மாறி, கிறிஸ்து பெருமானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு வாழ்ந்த தமிழ்ப் புலவர் கிருஷ்ணபிள்ளை (1827 - 1900). அவர் இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணியக்குறள் என்னும் நூல்களை இயற்றினார் என்பதை அறிய முடிகிறது. அவர் கம்பராமாயனத்தை நன்கு கற்றவர் என்பதை அவருடைய செய்யுள்களின் நடையையும் கற்பனையையும் தமிழ் வளத்தையும் கொண்டு உணரலாம்.

அந்தக் காலத்தில் புலவர்களின் திறமைக்குச் சான்றாகப் போற்றப்பட்ட சொல்லகம் - யமகம், திரிபு, சிலேடை, மடக்கு முதலியவை அமைந்த செய்யுள்கள் இருபத்தொன்று உண்டு. மற்ற பாட்டுகள் இனிய எளிய சொற்களால் அழகான நடையில் அமைந்துள்ளன.

## இரட்சணிய யாத்திரிகப் பெருமை

கிறித்துவத் தமிழ்க் காப்பியங்களுள் சிறப்பு வாய்ந்த காப்பியம் இரட்சணிய யாத்திரிகம் ஆகும். தமிழ்ப்பண்பாடு ஒரு சிறிதும் தவறாமல் எழுதப்பட்ட நூல் என்பது தெளிவாகிறது.

## காப்பியம் பிறந்த கதை

இயேசு பெருமானின் திருவருளால் ஆட்கொள்ளப்பெற்று, கிறித்துவம் தழுவிய கிருஷ்ணபிள்ளை "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் முதுமொழிக்கு ஏற்ப தமது இறை அனுபவத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள விரும்பினார். மேலும் இயேசு பெருமானின் பெருமையைப் புகழ்ந்து, அவரைப் போற்ற வேண்டும் என்ற விருப்பமும் அவர் உள்ளத்தில் எழுந்தது. இந்தப் பின்னணியில் தான் அவர், திருப்பயணியின் முன்னேற்றம் என்ற ஆங்கில நூலைப் படிக்க நேர்ந்தது. ஜான் பனியன் எனும் மேலைநாட்டு இறையடியார் தமது சிறைவாசத்தின் போது, தாம் கண்ட கனவின் விளக்க நூலான திருப்பயணியின் முன்னேற்றம் என்ற ஆங்கில நூலை எழுதினார். இந்த நூல் கவிஞர் வாழ்ந்த காலத்தில் பெரும் புகழ் பெற்று, பலராலும் பாராட்டப்பட்டது. இந்நூலின் கருத்தாலும் செய்தியாலும் பெரிதும் கவரப்பட்ட கவிஞர், இந்நூலைத் தழுவித் தமிழில் காப்பியம் ஒன்று இயற்ற முற்பட்டார். அதுவே இரட்சணிய யாத் திரிகம் என்பது தெளிவாகிறது.

## காப்பிய நோக்கம்

காப்பியம் எழுதப்பட்டதன் நோக்கத்தை ஆசிரியரே நூலின் சிறப்புப் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இரட்சணிய யாத்திரிகம் ஏதோ வெறும் பொழுதுபோக்குக்காகச் செய்யப்பட்ட புதுமையான கதையுமன்று, பாம்பின் நஞ்சை ஓர் அழகிய செப்புப் பாத்திரத்தில் வைத்துக் கொடுப்பதைப்போல, சிற்றின்பச் செய்திகளைக் கொடுக்கின்ற நூலும் அல்ல. இது மனிதச் சமுதாயத்துக்கு ஆத்தும மீட்பை வழங்குகிற அரிய மருந்து போன்ற படைப்பாகும் என்று இக்காப்பியத்தை தாம் இயற்றிய நோக்கத்தைக் கவிஞர் விளக்கியுள்ளார்.

> ***எண் வெற்று நேரப் போக்காய் புகல்வினோதமுமன்று***
> ***புற்ற ராவிடம் பொதிந்த செப்பெனக் கவிபுனைந்து***
> ***சிற்றின் பத்திறம் திருத்திய காதையுமன்று***
> ***மற்றிது ஆத்தும ரட்சணை வழங்குமோர் மருந்தாம்.[1]***
>
> ***(சிறப்புப் பாயிரம் 14)***

என்பது இக்கருத்தமைந்த கவிஞரின் பாடலாகும்.

பொதுவாக, காப்பியங்களில் வாசகர்களுக்குச் சுவையூட்டுவதற்காக, சிற்றின்பச் சுவை வளர்க்கும் செய்திகள் கூறப்படுவதுண்டு. ஆனால், கவிஞர் இந்த நூலில் அப்படிப்பட்ட செய்திகளை விலக்கி, இறைவனை அடையும் நெறியையே முக்கியப்படுத்தும் வண்ணம் பாடியுள்ளார்.

## காப்பியத்தன்மை

தமிழில் காப்பியத்தைப் பெருங்காப்பியம் என்றும் சிறுகாப்பியம் என்றும் இரு வகையாகப் பகுப்பது மரபு. பெருங்காப்பிய இலக்கணத்தைத் தண்டியலங்காரம் என்னும் இலக்கண நூல் விரிவாகக் கூறுகிறது. பெருங்காப்பியம் வாழ்த்து, வணக்கம், வருபொருள் இவற்றுள் ஏதாவதொன்று

முன்வர அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்கள் பற்றிப் பேச வேண்டும். மலை, கடல், நாடு, நகர், பருவம் முதலியவற்றை வருணிக்க வேண்டும். பல உட்பிரிவுகள் கொண்டிருக்க வேண்டும். சிறப்பாகத் தனக்குச் சமமானவர் இல்லாத தலைவனைப் பாட வேண்டும். இவ்வாறு பல விதிகளை அந்த இலக்கண நூல் வகுக்கிறது என்பது தெளிவாகிறது.

**வருணனைகள்**

காப்பியத்தில் நாட்டு வருணணை, நகர வருணனை, ஆற்று வருணனை ஆகியன ஆதிபருவத்தில் பரம ராச்சியப் படலத்தில் சிறப்புற இடம் பெற்றுள்ளன. வின் நாட்டில் பாயும் ஆற்றைச் சீவ கங்கை என்றே ஆசிரியர் சுவைபட வருணிக்கிறார்.

காப்பியத்தில் திருமணம், முடிசூடுதல், போர், வெற்றி முதலியன அமைந்திருக்க வேண்டுமெனத் தண்டியலங்காரம் கூறுகிறது. இவற்றுள் பயணம், போர், முடிசூடல் முதலியன இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. எனினும் முக்தியை நோக்கி நடக்கும் இப்பேரின்பக் காப்பியத்தில் கதை போக்குக்கு ஒவ்வாத நிகழ்ச்சிகள் இதில் இல்லை. ஆசிரியர் பாயிரத்திலே தெரிவித்தபடி, இது சிற்றின்ப வருணனைகளை நீக்கிய நூலாகவே படைக்கப்பட்டுள்ளது. எனவே பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவற்றை நிறைவு செய்யும் ஓர் அரிய பெரிய காப்பியமாகவே இரட்சணிய யாத்திரகம் திகழ்கிறது.

**இறைவன் மக்களிடத்துக் காட்டும் அன்பு**

இறைவனது மேலான அளவிடற்கரிய அன்பினைக் கிறித்துவ வேதாகமம் "தேவன் உலகத்தை மீட்டும் பொருட்டுத் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று கூறியுள்ளது. தேவகுமாரனாகிய கிறித்துவின் அன்பினைச் சொல்லும் பொழுது, அவர்தம் மகிமையெல்லாம் துறந்து, தம்மைத்தாமே வெறுமையாக்கி தம்மை ஜீவ பலியாகச் சிலுவையிலே அறைவதற்கு ஒப்பு கொடுத்ததோடு தம்மைத் துன்புறுத்தியவர்களுக்காக, தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காக, தம் தந்தையிடம் மன்றாடிய அன்பின் அரிய நிலை கூறப்பட்டுள்ளது. வள்ளுவரின்,

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பு முரியர் பிறர்க்கு"[2]**

என்ற வாக்கு நினைத்தற்குரியது.

இரட்சணிய யாத்திரிகம் இறைவனாகிய பிதாவின் அன்பை,

**"தன்னொரு மகவைத்தந்த தற்பிரன் அன்பு வாழி**
**பொன்னுவ கிழிந்து வந்த புண்ணியன் வாழிவாழி**
**மன்னுயிர் புரக்க வந்த மனுமகன் சரணம் வாழி**
**என்னையிந் நிலைபாலிக்கு மெம்பிரான் கிருபை வாழி"[3]**

என்று குறித்துள்ளது.

**இயேசுவின் சிலுவைப்பாடும், கருணைவீரமும்**

**தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்**
**பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்து எந்தாய்**
**இன்னதென அறிகிலார் தாம்செய்வது இவர் பிழையை**
**மன்னியும் என்றருட் கனிவாய் மலர்ந்தார் நம் அருள்வள்ளல்[4]**

என்னும் இரட்சணிய யாத்திரிகப் பாடல் இயேசுவின் சிலுவைப் பாடுகளையும் கருணை வீரத்தையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

**இரட்சணிய யாத்திரிகம் பற்றி மு.வ. கருத்து**

தமிழ் மக்கள் விரும்பத்தக்க வகையில் தமிழ் மரபுகள் அமைய நூலை இயற்றியுள்ளார். இதில் உள்ள பக்திப் பாடல்கள் ஆழ்வார் நாயன்மார்களின் பாடல்களைப் போல் உருக்கமான முறையில் அமைந்துள்ளன. பாவமுள்ள உயிர் கவலையால் நொந்து கிறிஸ்துவின் அருளால் திருந்தி மோட்சம் அடைவதை இந்தக் காப்பியம் விளக்கிக் கூறுவதாக அமைகிறது என்பதை மு.வ.வின் கருத்தாக அறிய முடிகிறது.

### இரட்சணிய யாத்திரிகம் பற்றி சி.பாலசுப்பிரமணியன் கருத்து

"சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் பாடிய திருப்பாசுரங்களின் மணம் இரட்சணிய மனோகரத்தில் கமழ்கிறது. இறைவனது பேரின்ப வெள்ளம் பொங்கிப் பெருகிப் பூரணமாய் நிற்கும் நிலையினைக் கண்டு அதனைப் பருகுமாறு பரிந்தழைக்கும் தாயுமானவர் முதலிய ஆன்றோர் பாடல்களில் உள்ள ஆர்வம் இரட்சணியப் பாடல்களிலும் அமைந்து நம் உள்ளத்தை அள்ளுகின்றது என்பதை சி.பாலசுப்பிரமணியன் கருத்தாக அறியலாம்.

### இயேசு கிறித்து பிறந்த போது நிகழ்ந்த அற்புதங்கள்

இறைமகனாகிய இயேசு கிறித்து மாட்டுத் தொழுவத்தில் பிறந்தபோது, வானில் ஒரு வால் நட்சத்திரம் தோன்றியது.

இயேசுபிரான், "யூதர்களின் அரசன்" என்று தேவதூதன் கூறியதால் கீழ்திசை அரசர்கள் மூவரும், பல பெரியோர்களும், இயேசு கிறித்து குழந்தையாகப் பிறந்த பெத்லேகம் என்னும் ஊருக்கு வந்து அவரை வணங்கினர். அக்குழந்தைக்கு தங்கள் வாழ்த்துக்களையும் கூறினர் என்பதையும் அறிய முடிகிறது.

### இயேசு கிறித்து புரிந்த அற்புதங்களில் சில

இயேசு கிறித்து முதன் முதலில் கானாவூர் திருமணத்திலே சாதாரண நீரை, திராட்சை ரசமாக மாற்றினார். இதுவே அவர் செய்த முதல் அற்புதமாகும். (யோவான் 2: 1-11) என்பதை பரிசுத்த வேதாகமம் மூலம் அறிய முடிகிறது.

இறந்து போன "லாசரு" என்பவனைக் கல்லறையிலிருந்து உயிர்ப்பித்து எழுப்பினார். குஷ்டரோகம் பிடித்த ஒருவன் அவருடைய திருவுடலைத் தொட்டு குணம் பெற்றான். இன்னும் பல அற்புதங்களை அவர் செய்திருக்கிறார். அவற்றையெல்லாம் கிறித்தவர்களின் புனித நூலான விவிலியத்தில் (பைபிள்) காணலாம்.

### இறைமகனின் எளிய நிலை

**பாசம் என உன்னலிர் மனித்தமை பகைத்த**
**நீசமனு மக்களை நினைந்து உருகும் அன்பின்**
**நேசம் எனும் வல்லியதை நீக்க வசம் இன்றி**
**ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்.[5]**

பாவத்தில் கட்டுண்டு கிடந்த மக்களை நல்வழிப்படுத்த முயற்சி செய்த இயேசுபிரானின் மீது வீண்பழி சுமத்தி அவரைக் கயிற்றால் கட்டி, இழிவான வார்த்தைகளைப் பேசி நீதிமன்றத்திற்கு இழுத்து வருகின்றனர், தன்னை துன்பப்படுத்திய மக்களுக்காக, அவர்கள் தம் பாவச் செயல்களுக்குத் தண்டனை அனுபவிப்பார்களே என்று எண்ணி, இயேசு அவர்கள் மீது இரக்கம் கொள்கிறார் என்பதை இதன் மூலம் அறியலாம்.

### இயேசு மக்களை பாவத்திலிருந்து மீட்டெடுக்க வந்தவர்

**பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி**
**ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற**
**வேதனை ஊழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்**
**நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.[6]**

பாவம் செய்கின்ற மக்களை அதிலிருந்து மீட்க வேண்டும் என்று பரமபிதா தனக்குக் கட்டளையிட்டு இந்தப் பூமிக்கு அனுப்பி வைத்த வேலை நிறைவேற வேண்டுமே என்பதற்காக தன்னை துன்பப்படுத்தியவர்கள் மீது கோபம் கொண்டு வருந்தக் கூடிய சொல் எதையும் கூறாமல், இயேசு அமையாக நின்றார் என்பதை அறிய முடிகிறது.

### இறைமகன் மீது பழி சுமத்திய கொடியவர்கள்

**எண்ண மிட்டவர் பொந்திய பிலாத்தேனும் இறைமுன்**
**அண்ணலைத் தனி நிறுவவும் ஆக்கினைத் தீர்ப்புப்**
**பண்ணவும் என நிண்ணயம் பண்ணினர் பகைகொண்டு**
**ஒண்ணுமோ வறுங்கூவலுக்கு உததியை ஒடுக்க!.[7]**

இளைமகன் மீது பழி சுமத்திய கொடியவர்கள் அவருக்குத் தண்டனைப் பெற்றுத் தரவேண்டும் என்ற எண்ணத்தில் அந்நகரின் ஆளுநராக இருந்த போந்திய பிலாத்துவின் முன் நிறுத்தினர். வற்றிய கிணற்றுக்குள் கடலை அடக்க முடியாது. அதுபோல இறைமகனுக்கு யாரலும் தண்டனை தரமுடியாது. அவராகவே தாம் கருதி வந்த வேலை முடிவதற்காக கட்டுப்பட்டால் மட்டுமே முடியும்.

### இயேசுவின் தலையில் முள்முடி சூட்டிய பாவிகள்

**கைதுறுங் கோலினைக் கவர்ந்து கண்டகர்**
**வெய்துறத் தலைமிசை அடித்து வேதனை**
**செய்தனர் "உமிழ்ந்தனர் திருமுகத்தினே"**
**வைத்தனர் பழித்தனர், மற்றங்கொள் நீசரே.[8]**

இறை மகனாருக்கு முள்முடி சூட்டி, கையில் செங்கோல் என்று கூறி கேலி செய்து ஒரு கோலினைக் கொடுத்திருந்தனர். பின்னர் அக்கோலினை பிடுங்கிக் கொண்டு, முள்முடி சூட்டியதால் இரத்தம் வந்து கொண்டிருந்த தலையில் மேலும் அடித்துத் துன்புறுத்தினர். அவர் மீது பழிச் சொற்களைக் கூறி முகத்தில் உமிழ்ந்தனர் அந்தப் பதாகர்கள்.

### கொடுமைகளைக் கண்டு இயற்கைபொங்கி எழாமல் அமைதி காப்பது ஏன்?

**என்கொல் மேதினி கீண்டு வெடித்திலது என்பார்!**
**என்கொல் வானம் இடிந்து விழுந்திலது என்பார்!**
**என்கொல் வாரிதி நீர் சுவறாததும் என்பார்!**
**என்கொலோ முடிவு இத்துணை தாழ்த்ததும் என்பார்!.[9]**

இறைமகனாரை அந்தக் கொடியவர்கள் கொடுமைகள் பல செய்து துன்புறுத்தினர். அவற்றைக் கண்டு மனம் பதைத்த மக்கள் இவ்வளவு கொடுமைகளைக் கண்டு இயற்கை பொங்கி எழாமல் அமைதி காப்பது ஏன்? உலகம் ஏன் இன்னமும் அழியவில்லை என்று கதறினார்கள் என்பதை இதன் மூலம் அறியலாம்.

### பொறுமை காத்த இயேசு

**பொல்லாத யுதர்களும் போர்ச்சேவ கர்குழுவும்**
**வல்லானை எள்ளிப் புறக்கணித்து வாய்மதமாய்ச்**
**சொல்லாத நிந்தை மொழி சொல்லித்து ணிந்தியற்றும்**
**பொல்லாங்கை யெல்லாம்நம் ஈசன் பொறுத்திருந்தார்.[10]**

தீய குணம் படைத்த யூதர்கள் மற்றும் போர்ச் சேவகர்கள் சொல்லத் தகாத இழிவான வார்த்தைகளைக் கூறி இறைமகனாரை இழிவுபடுத்திய போது அவர் அனைத்தையும் தாங்கிக் கொண்டு பொறுமையுடன் இருந்தார் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. ஆனால் இயேசு பிரானின் பொறுமை மிகமிகப் பெரியது. இயேசு தன்னை காயப்படுத்தியவர்களையும், இழிவான கடுஞ்சொல் பேசியவர்களையும் மன்னித்தார் என்பதை இதன் மூலம் அறியலாம்.

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை".[8]**

தோண்டுபவரையும் தாங்கும் பூமியைப் போல் தன்னை தரக் குறைவாகப் பேசுபவரையும் பொறுத்துக்கொள்வதே தலை சிறந்தது எனலாம் இதற்கு சான்றாக விளக்கியவர் தான் இயேசு என்பதை அறிய முடிகிறது.

### முடிவுரை

இயேசுபிரான் பல்வேறு அற்புதங்களையும் அதிசயங்களையும் நிகழ்த்தி வந்தபோது அவருடைய சீடர்களில் ஒருவரான யூதாஸ் என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்டார். இறுதியில் அவர் சிலுவையில் அறையப்பட்டார். அவர் இன்னுயிர் பிரிந்தது. அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்று கிறித்தவர்கள் நம்புகிறார்கள் என்பதை அறியலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. வகைமை நோக்கில், தமிழ் இலக்கிய வரலாறு முனைவர். பாக்யமேரி பக், *353*
2. தமிழ் இலக்கிய வரலாறு - மு.வரதராசன் பக், *290*
3. தமிழ் இலக்கிய வரலாறு - சி.பாலசுப்பிரமணியன் பக், *182*
4. கட்டுரைகளும் கடிதங்களும் - இரா.சீனிவாசன் பக்,*12*
5. *12*ஆம் வகுப்பு பொதுத் தமிழ் - புதிய சமச்சீர் பாடத்திட்டம் பக்,*196*
6. மேலது பக், *196*
7. மேலது பக், *196*
8. மேலது பக், *197*
9. மேலது பக், *197*
10. மேலது பக், *197*
11. திருக்குறள் - பொறையுடையமை